<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

<u>அ.வ.எண். **201/2023**</u>

2024-ம் வருடம் டிசம்பர் திங்கள் 19-ம் நாளன்று வாதி சாட்சியாக பி.வா.சா.2-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : மாரிமுத்து | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை:-</u>

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

என் மனைவி பெயர் தங்கம்மாள். என மனைவி, என் மாமனார் அய்யனகவுண்டரின் இரண்டாவது மனைவி எர்ரம்மாளின் மகள் ஆவார். என் மனைவியுடன் பிறந்தவர்கள் முத்தம்மாள், பழனிச்சாமி, ஆண்டியப்பன், ராசு (எ) கிருஷ்ணன் ஆகியோர் ஆவார். என் மாமனாரின் முதல் மனைவி பொம்மாயி. அவர்களது வாரிசுகள் முருகன், காளியம்மாள், செண்பகவள்ளி, கருப்புசாமி, 1 ம் பிரதிவாதி மாரியம்மாள் ஆவர். மேற்படி முருகனின் மகன் சக்திவேலை எனக்கு தெரியும். அவர் உயில் எழுதுவதற்கு வந்தார். செண்பகவள்ளியின் மகன் பெயர் ராமு. ராமுவின் மகள் பெயர் எனக்கு தெரியாது. ராமுவின் பெற்றோர்கள் ஊர்

சீத்தப்பட்டி. ராமுவின் அப்பா கரூர், காந்திகிராமத்தில் குடியிருந்தார். அதற்கு முன்பு சேலத்தில் வசித்து வந்தார். செண்பகவள்ளியின் கணவர் பெயர் வெங்கடாசலம். வெங்கடாசலம் பொதுப்பணித்துறையில் வேலைபார்த்தார். செண்பகவள்ளியும், அவர் கணவரும் சம்பாத்தியம் செய்து, சொத்தை வாங்கினர். உயில் எழுதிய அன்று கிரயப்பத்திரத்தை பார்த்தேன். கிரயப்பத்திரத்தை யார் கொண்டு வந்தார் என்றால் செண்பகவள்ளி கொண்டு வந்தார். நான் செண்பகவள்ளியை பார்க்க சென்றபோது, நாளைக்கு உயில் எழுதவேண்டும், நீங்களும், என் அண்ணன் மகள் சக்திவேலும் வரவேண்டும் என்று சொன்னார். சக்திவேலுக்கு செண்பகவள்ளி நேரடியாக தகவல் சொல்லவில்லை. செண்பகவள்ளியை நான் எங்கு சென்று சந்தித்தேன் என்றால் உயில் எழுதிய அன்று சக்திவேலும், நானும் செண்பகவள்ளி வீட்டிற்கு காலை சுமார் 9.00 – 10.00 மணியளவில் சென்றோம். அந்த வீட்டில்தான் இறக்கும்வரை செண்பகவள்ளி வசித்து வந்தார். 1, 2 வாதிகளும், 1ம் வாதியின் பெற்றோர்களும் செண்பகவள்ளியுடன் அனுசரணையாக இருந்து வந்தனர் என்றால் சரியல்ல. 2ம் வாதி பூப்படைந்த சடங்கிற்கு செண்பகவள்ளி கலந்துக்கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. உயில் ஆவணம் பதிவு செய்யப்படவில்லை. உயில் ஆவணம் முத்திரைத்தாளில் எழுதப்பட்டதா அல்லது பேப்பரில் எழுதப்பட்டதா என்றால் பச்சைத்தாளில் எழுதப்பட்டது. நாங்கள் வழக்கறிஞர் வீட்டிற்கு 11.00 மணிக்கு சென்றோம். வழக்கறிஞரின் வீடு வவுசி தெருவில் உள்ளது. உயில் ஆவணத்தில் உள்ள வாசகங்கள் யாரால் சொல்லப்பட்டது என்றால் செண்பகவள்ளியால் சொல்லப்பட்டது. சொத்து விபரம் எதை பார்த்து எழுதப்பட்டது என்றால் பத்திரத்தை பார்த்து எழுதப்பட்டது. உயிலை யார்

தட்டச்சு செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வேலை பார்த்த ஒருவர் தட்டச்சு செய்தார். உயில் எழுதுவதற்கு வழக்கறிஞர் குறிப்பு எடுத்தாரா என்றால் வரைவு செய்து, படித்து காண்பித்தார். வழக்கறிஞர் படித்துக்காண்பித்தபிறகு, செண்பகவள்ளி சரி என்று சொன்னார். முதலில் செண்பகவள்ளி கையெழுத்து போட்டார். அதற்கடுத்து சக்திவேல் கையெழுத்து போட்டார். அதன்பின்னர் நான் கையெழுத்து போட்டேன். அதன்பிறகு வழக்கறிஞர் கையெழுத்திட்டு, ஸ்டாம்ப் வைத்தார். ஒரே பேனாவால் நான்கு பேரும் கையெழுத்து போட்டோம். தட்டச்சு செய்தவர் எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் அவர் கையெழுத்து போடவில்லை. உயில் எழுதிய விவரத்தை வழக்கறிஞர் நோட்டில் பதிவு செய்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. உயிலுக்கு நெம்பர் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. உயில் எழுதி முடித்தபிறகு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் செண்பகவள்ளியிடம் ஒப்படைக்கப்பட்டது. உயில் பற்றிய விவரம் எப்போது 1 ம் பிரதிவாதிக்கு எப்படி தெரியவந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. இரண்டு நாள் கழித்து நான் சொன்னேன். நான், சாட்சி சக்திவேல், 1 ம் பிரதிவாதியின் உடன்பிறந்தவர்கள், 1 ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து மோசடியாக தயாரித்தது என்றால் சரியல்ல. உயிலில் உள்ள கையெழுத்து செண்பவள்ளியுடையதல்ல என்றால் சரியல்ல. உயில் எழுதியது குறித்து எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. அய்யனார் கவுண்டரின் வாரிசுகளான நாங்கள் சேர்ந்துக்கொண்ட, செண்பகவள்ளி விட்டுச்சென்ற சொத்தை வாதிகள் அடையக்கூடாது என்பதற்காக, நாங்கள் உயிலை தயாரித்தோம் என்றால் சரியல்ல. .........

செண்பகவள்ளிக்கு உயில் எழுதி வைக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
மாவட்ட நீதிபதி,
கரூர்

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

ராமமூர்த்திக்கும், சங்கீதாவுக்கும் நடந்த திருமணத்தை ராமமூர்த்தியின் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. சேலத்தில் உள்ள வீட்டை செண்பகவள்ளிக்கு என் அப்பா கொடுத்தார் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. செண்பகவள்ளியும், வெங்கடாசலமும் கரூருக்கு குடிவருவதற்கு முன்பே, வெங்கடாசலத்தின் உடன்பிறந்த சகோதரர்கள் ரெங்கசாமியும், முத்துச்சாமியும் கரூரில் குடியிருந்து வந்தனர். அதனால்தான் செண்பகவள்ளியும், வெங்கடாசலமும் கரூருக்கு குடிவந்தனர் என்றால் சரிதான். செண்பகவள்ளி படிக்கவில்லை. திருமணத்திற்கு பிறகு அவர் கணவர் மூலம் கையெழுத்து போடுவதற்கு கற்றுக்கொண்டார். வெங்கடாசலம் இறந்து சுமார் 10 மாதங்கள் கழித்து 2ம் வாதி பூப்படைந்தார் என்றால் சரிதான். ராசிபுரம், கூனவேலம்பட்டியில் 2ம் வாதிக்கு சடங்கு நடந்தது என்றால் சரிதான். அந்த சடங்கு நிகழ்ச்சியில் செண்பகவள்ளி கலந்துக்கொண்டார் என்றால் சரிதான். அவர்கள் கூப்பிடவில்லை. ஊர்க்காரர்கள் சொல்லி அவர் சென்றார். அந்த சடங்கு நிகழ்ச்சியில் செண்பகவள்ளி கலந்துக்கொண்ட புகைப்படம் வா.சா.ஆ.10 என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் ஊர்க்காரர்கள் சொல்லி செண்பகவள்ளி கலந்துக்கொண்டார் என்று சொல்வது தவறு என்றும், 1ம் வாதியும், அவரது பெற்றோர்களும் அழைத்ததின்பேரில் செண்பகவள்ளி கலந்துக்கொண்டார் என்றால் சரியல்ல. வெங்கடாசலம் இறந்தபிறகு, செண்பகவள்ளி கரூரில் கட்டிய வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். நானும், என் சகோதரிகளும், சகோதரரும் செண்பகவள்ளிக்கு ......

உதவியாகவும், அனுசரணையாகவும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. வெங்கடாசலம் இறப்பிற்கு பின்னர், 1ம் வாதியும், அவரது பெற்றோர்களும், 2ம் வாதியும்தான் செண்பகவள்ளியை அன்புடனும், பாசத்துடன் கவனித்துக்கொண்டனர் என்றால் சரியல்ல. செண்பகவள்ளி விருப்பப்பட்டுத்தான் 1ம் வாதிக்கு மறுதிருமணம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. செண்பகவள்ளி இறந்தபிறகு, 30.07.2019 அன்று அபிமன்னன், நான், திருப்பதி ஆகியோர் செண்பகவள்ளியின் வீட்டிற்குள் சட்டத்திற்கு புறம்பாக நுழைந்து, வங்கி ஏடிஎம் கார்டு, பத்திரம், வீட்டுவரி ரசீது, மின்இணைப்பு ரசீது ஆகியவற்றை நாங்கள் திருடிச்சென்றோம் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக ஆசைத்தம்பி எங்களுக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அதன்பின்னர் 1ம் வாதியும் எங்களுக்கு எதிராக புகார் கொடுத்தார். ஆண்டியப்பன் மகன் திருப்பதி தரகம்பட்டி அருகில் உள்ள குருனியூரில் வசித்து வருகிறார். 1ம் வாதிக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. உயில் எழுதிய விவரம் யாரால், எப்போது எனக்கு தெரிவிக்கப்பட்டது என்றால் என் அக்கா எனக்கு தெரிவித்தார். உயில் எழுதிய அன்று மாலை என்னிடம் சொன்னார். உயில் எழுதும்போது நான் செண்பகவள்ளியுடன் செல்லவில்லை. உயில் எழுதும்போது என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. உயிலில் சாட்சி கையெழுத்திட்டது பற்றி என் அப்பா என்னிடம் சொன்னார். உயில் ஆவணத்தின் அசலை மாகராட்சியிடம் கொடுத்து, வரிவிதிப்பு மாற்றம் செய்வதற்கு நடடிவக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு முடிந்தபிறகு வருமாறு கூறிவிட்டனர். செண்பகவள்ளி 06.06.2019 ல் ......

இறந்தார். செண்பகவள்ளி இறந்த நாள் முதல் 17.08.2023 வரை உயிலை அரசு அலுவலகத்தில் கொடுத்து, பெயர்மாற்றம் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுத்தேன். செண்பகவள்ளி பெயரில் இந்தியன் ஓவர்சீஸ், பாரத ஸ்டேட் வங்கி ஆகிய வங்கிகளில் கணக்கு இருந்தது. அந்த கணக்குகளில் இருந்த பணத்தை வாங்குவதற்கு, உயிலை கொடுத்து, பணத்தை வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. உயில் மோசடியானது என்பதால்தான் அதை நான் அரசு அலுவலில் பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. செண்பகவள்ளியின் கையெழுத்தை மோசடியாக போட்டு, உயிலை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயிலில் உள்ள மற்றொரு சாட்சி முருகன் மகன் சக்திவேல். வெங்கடாசலத்தின் உடன்பிறந்த சகோதரர் ரெங்கசாமியின் வாரிசுகள் கரூரில் வசித்து வருகின்றனர். உயிலை வரைவு செய்த வழக்கறிஞரிடம் எங்கள் குடும்பம் சம்மந்தப்பட்ட வழக்குகளை நாங்கள் நடத்தவில்லை. இந்த சொத்தை பொறுத்து நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. அய்யனாகவுண்டரின் முதல்மனைவி பொம்மாயின் வாரிசுகளும், அய்யனாகவுண்டரின் இரண்டாவது மனைவி எர்ரம்மாளின் வாரிசுகளும் சேர்ந்துக்கொண்டு, வழக்குச்சொத்தில் உள்ள வாதிகளின் உரிமையை மோசடி செய்வதற்காக, பொய்யான உயில் ஆவணத்தை தயாரித்தோம் என்றால் சரியல்ல. உயிலில் உள்ள கையெழுத்து செண்பகவள்ளியுடையதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் மீது செண்பகவள்ளி பாசத்துடன் இருந்து வந்தார் என்றும், இயற்கையான வாரிசுகளை ஒதுக்கிவிட்டு, என் மீது உயில் எழுதி வைக்கவேண்டிய அவசியமும், தேவையும் கிடையாது என்றால் சரியல்ல.

வழக்குச்சொத்துக்களை சட்டத்திற்கு புறம்பாக நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளோம் என்றும், சொத்தின் சுவாதீனத்தை வாதிகள் வசம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. செண்பகவள்ளி செலுத்தி சொத்து வரி ரசீது, மின்கட்டண ரசீது ஆகியவற்றை நாங்கள் மோசடியாக கைப்பற்றி, இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றும், நாங்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
மாவட்ட நீதிபதி,
கரூர்